# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் பண்புக் கூறுகள்

## (பகுதி – 5)

**17 April 2020**

**(23 Shabaan 1441 AH)**

بسم الله الرحمن الرحيم

# The Attributes of Allah (Pt.5)

## அல்லாஹ்வின் பண்புக் கூறுகள் (பகுதி 5)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்கள் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்∴பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையை நிகழ்த்தினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் இன்று நான் அல்லாஹ்வின் பண்புகளின் விஷயத்தில் எனது வெள்ளிக் கிழமை பேருரையின் 5 –வது பகுதியைத் தொடர்கிறேன். ஆகவே அல்லாஹ் தன் அடியார்களிடத்து மிகைத்தவனாவான் என்று நமக்குச் சொல்கிறான். அவன் அனைத்தையும் கட்டுப்படுத்துபவன், முழுமையான சக்திவாய்ந்தவன். எல்லாவற்றையும் அழிக்க அவனுக்கு அதிகாரம் உண்டு. தண்டிக்கும் சக்தி அவனுக்கு இருக்கிறது. மரணத்தைத் தருபவனும், உயிரைக் கொடுப்பவனும் அவன் மட்டுமாவான். உங்களை எவராலும் அழிக்காதபடி, உங்கள் பாதுகாப்பிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவன். திருக்குர்-ஆனில் மற்ற பல இடங்களில் குறிப்பிடப் பட்டிருப்பதாகக் காணலாம் அதாவது நீங்கள் பல பாவங்களைச் செய்துள்ளீர்கள். அதன் காரணமாக அல்லாஹ் உங்களை முற்றிலுமாக அழிப்பது எல்லா நிலையிலும் பொருத்தமானதாக இருக்கும். உங்களிடம் மட்டுமல்ல எல்லா வகையான உயிரினங்களுடனும் அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் அவனுடைய உரிமைக்குள்ளேயே இருக்கும்.

திருக்குர்-ஆனில் மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான். அதாவது ஒவ்வொரு நபருக்கும், அவர் மறைவாகவோ அல்லது வெளிப்படையாகவோ அது இரவாக இருந்தாலும் அல்லது பகலாக இருந்தாலும் அவர் வெளியே செல்லும் போது அவரைப்பாதுகாக்க அல்லாஹ் கண்காணிப்பாளர்களை (மலக்குகள்) அவர் மீது வைத்திருக்கிறான். அவரை எதிலிருந்து பாதுகாக்க? அல்லாஹ்வின் கட்டளைகளிலிருந்து பாதுகாப்பதற்காகும்.

எனவே, இங்கே நாம் எந்த விஷயத்தை கையாள்கிறோம்? உண்மையில் இது இறைக் கட்டளையாகும். அதாவது இது உயிரைக் கொடுக்கும் மற்றும் மரணத்தைத் தரும் இறை ஆணையாகும். இறை ஆணை இல்லாமல் இறக்கும் திறன் யாருக்கும் இல்லை. ஆகவே, அல்லாஹ்வின் ஆணைப்படி உங்கள் மரணத்திற்கு அழைப்பு வந்தால், அல்லது வரும்வரை அல்லாஹ்வின் தக்தீர் தான் ஒரு காலம்வரை நம்மைப் பாதுகாக்கிறது. அதாவது அவனது மற்ற ஆணைகளிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது என்று அல்லாஹ் கூறுகிறான். அவன் எல்லாவற்றையும் அகற்றவும் அழிக்கவும் கூடிய சக்தி மற்றும் திறனைக் கொண்டிருக்கின்றான். அதே நேரம் அவனுடைய மற்ற ஆணைகள் உங்களை பாதிக்காமல், உங்களை பாதுகாப்பதும் அவனது தக்தீர் மூலமாகவே ஆகும்.

மற்றொரு வசனத்தில், அல்லாஹ்வின் புறமிருந்து மரண ஆணைவராத வரை அவனது மற்ற ஆணை தொடர்ந்து உங்களைப் பாதுகாக்கும் என்று மிகத் தெளிவாக அல்லாஹ் கூறுகிறனர். ஆனால் ஒருவரின் மரண நேரம் வரும்போது, அந்த நேரத்தில் அல்லாஹ் தேவதூதர்களிடம் மரணச் செய்தியை அளித்து, குறிப்பிடப்பட்ட அந்த நபரின் உயிரை (ஆன்மாவை) எவ்வித அநீதியும் செய்யாமல் பெற்று திரும்பிச் செல்லும்படி அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.

இங்கு ஏற்கெனவே நான் உங்களுக்கு விளக்கியபடி, ஹக் என்ற சொல் குறிப்பிடுவது போன்று, அனைவரும் தங்களின் உண்மையுள்ள எஜமானிடம் திரும்புவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான ஆணை பிறப்பதும் அவனிடமிருந்தாகும். பின்னர் விரைவில் ஒவ்வொருவரின் கணக்குகளுக்கும் அவன் தீர்ப்பு கூறுவான்.

இங்கு "மாலிக்கி யவ்மீத்தீன்" என்னும் பண்பை ஹக் என்னும் பண்புடன் இணைந்திருக்கின்றது. இந்த இணைப்பு நம்முடைய செயல்களில் நம் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இது நம்முடைய செயல்களை கண்காணிக்க நமக்கு உத்தரவுகளை வழங்குகிறது. உயர் அதிகாரியான அல்லாஹ்விடமிருந்து நாம் ஒருபோதும் தப்ப முடியாது என்று இது நமக்கு எச்சரிக்கிறது. ஆனால் அவனுடைய மற்ற கட்டளைகளைச் செயல்படுத்தி தொடர்ந்து நம்மைப் பாதுகாப்பது அல்லாஹ்வின் தயவாகும். அந்த தயவானது மரணம் வரை நீடிக்கும் ஒன்றாகிறது. மரணம் வரும்போது, அது அல்லாஹ்வின் ஆணையிலிருந்து வரும். அந்த நேரத்தில், சத்தியத்துடன் நியாயந்தீர்க்க தீர்ப்பு நாளின் எஜமானன் முன் நீங்கள் ஆஜராக்கப்படுவீர்கள்.

திருக்குர்-ஆன் இந்த விஷயத்தை தெளிவாக விளக்குகிறது. அல்லாஹ் உண்மையானவன். அவன் சத்தியமாவான். அவன் சத்தியத்தைக் கொண்டு தீர்ப்பு கூறுகின்றான். யாருக்கும் எதிராக அவன் எந்தவிதமான மீறல்களையும் செய்வதில்லை. அவன் சரியான நீதியுடன் தீர்ப்பளிப்பான், அவன் கணக்குகளை மிக விரைவாக தீர்ப்பான். இந்த தற்காலிக உலகில் நீங்கள் வாழும் வரை அவன் உங்களுக்கு சிறிது நேரம் வழங்குகிறான். ஆனால் மரணம் வந்துவிட்டால், உங்கள் கணக்குகளைத் தீர்ப்பதற்கு அவன் அதிகநேரம் எடுக்க மாட்டான்.

மேலும், அல்லாஹ் முழுமையான உயர் ஆற்றலைக்கொண்ட இறைவனாக இருக்கின்றான். அவன் ஒரு உயர் அதிகாரியாகவும், ஒரு உண்மையின் வடிவமாகவும் உங்கள் முன் வெளிப்படுவான். ஆகவே, நான் உங்களுக்குச் சொன்னது போல், நீங்கள் தண்டனையிலிருந்து தப்பிக்க விரும்பினால், உண்மையை (அல்லாஹ்வை) உங்கள் எஜமானராக ஏற்று செயல்பட வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் உண்மை (அல்-ஹக்) ஆவான். "மௌலா" என்றால் தோழர், உங்களுக்கு உதவி செய்பவர், உங்களைப் பாதுகாக்கும் ஒருவர் என்று பொருள். ஆகவே, நீங்கள் அனைவரும் அவனிடம் திரும்ப வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான், இந்த உலகில் நீங்கள் உண்மையை (அல்லாஹுவை – அல்-ஹக்கை) ஏற்றுக்கொள்ள

வில்லை என்றால், நீங்கள் உண்மையுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தவில்லை என்றால், மறுமையில் அவனுக்கு உங்களுடன் எந்த தொடர்பும் இருக்காது.

எனவே, நீங்கள் தண்டனையிலிருந்து தப்பிக்க விரும்பினால், நீங்கள் உண்மையை உங்களின் தோழனாக (மௌலா) மாற்ற வேண்டும். இல்லையெனில் நீங்கள் மீட்கப்படமாட்டீர்கள். இந்த உலகில் பொய்களைத் தங்கள் தோழர்களாக மாற்றியவர்கள், ஒவ்வொரு சிரமத்தின் நேரத்திலும் அவர்கள் பொய்யை ஆதரிப்பார்கள். ஒவ்வொரு பேராசையின் நேரத்திலும் அவர்கள் பொய்களின் உதவியை தேடிக் கொள்கிறார்கள், புகழுக்காகவும் அவர்கள் பொய் கூறுவார்கள். ஒவ்வொரு கணக்கிலிருந்தும் தப்பிக்க அவர்கள் பொய்களின் உதவியை தேடுவார்கள். சுருக்கமாக அவர்களின் உட்புறமும் வெளிப்புறமும் முற்றிலும் பொய்யால் நிறைந்திருக்கும். தீர்ப்பு நாளில் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள உண்மையைச் சொன்னால், அது ஒரு பெரிய பொய்யாக இருக்கும். திருக்குர்-ஆன் இதற்கு ஒரு தெளிவான உதாரணத்தை அளிக்கிறது. **அதவாது இத்தகைய முட்டாள்கள் தீர்ப்பு நாளில் கூட, உண்மையை கூறி அல்லாஹ்வின் பாதுகாப்பிற்குள் வருவதற்கு பதிலாக, அவர்கள் பொய்களில் பாதுகாப்பு பெற முயற்சிப்பார்கள்.**

எனவே, உண்மையல்ல என்று உங்களுக்குத் தெரிந்த ஒன்றைச் சொல்வது தான் பொய் கூறுதல் என்பதன் பொருள். உங்கள் சக மனிதன் (தோழர்/சகோதரர்) இதைச் செய்யவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் நீங்கள் அதை அறிந்திருந்தே அதற்கு மாறாக "அவர் செய்தார்" என்று கூறுகிறீர்கள். இதுவே பொய், இத்தகைய செயலைச் செய்பவர் ஒரு பொய்யர். திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறுகிறான். **"பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகுவதாக" (3 : 62)**

திர்மிதியின் ஒரு ஹதீஸின்படி, **"பொய் சொல்வது பாவத்திற்கும், பாவம் நரகத்திற்கும் வழிவகுக்கிறது".** பெருமளவில் பொய் சொல்வதன் மூலம் ஒரு நபர் இறுதியில் எல்லாம்வல்ல அல்லாஹ்வின் பார்வையில் ஒரு பெரிய பொய்யராக முத்திரையிடப்படுவார். நம்பிக்கைக் கொண்ட ஒருவருக்கு, பொய் சொல்வது தகுதியானது அல்ல. இது வெட்கக்கேடான, இழிவான

மற்றும் ஒரு நபரை தகுதியற்றவராக மாற்றும் செயலாகிறது. எனவே பொய் சொல்வது தகுதியான நபரின் வேலை அல்ல. பொய் கூறுதல் ஷரி-அத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு நடைமுறையை ஊக்குவிப்பதும் ஆதரிப்பதும் ஆகும். இது இன்னும் தீவிரமானது. ஏனெனில் இது ஒரு சமூகத்தை ஒட்டுமொத்தமாக வழி தவறச் செய்யும் ஒரு செயலாகிறது. இந்த பொய் இலக்குகளைக் கொண்ட ஒரு புஹ்த்தான் (Bhutaan) ஆகும். புஹ்த்தான் (Bhutaan) என்பதன் பொருள், “தவறான பழி” மற்றும் “அவதூறுகள்” ஆகிறது. அதன் இலக்கானது எல்லாம் வல்ல அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீது அவதூறு மற்றும் தவறான பழிகளை சாட்டுவதாகும். இத்தகைய நபர் பொய்களை நம்ப வைக்கிறார். இது சர்வவல்லமையுள்ள அல்லாஹ்வின் தூதரின் போதனை என்று மக்களை தவறாக நம்பவைக்க அவர் விரும்புகிறார். ஆனால் இது உண்மையல்ல என்பதை அவர் நன்கு அறிவார். அவர் தனது பொருள் ஆதாயத்துக்காகவே இதைச் செய்கிறார், சில சமயங்களில் அவர் மற்றவர்களுக்கு முன்னால் கேலிக்குரியதாக தோன்றக்கூடாது என்பதற்காக அதை அவர் செய்கிறார்.

சில நேரங்களில் ஒரு நபர் உண்மை இல்லாத ஒன்றைப் பற்றி பேசலாம். ஆனால் அவர் அதை நோக்கத்துடன் செய்வதில்லை. குழப்புதல் மற்றும் தவறுதலாக மட்டுமே அதை அவர் செய்கிறார். இந்த வகையான சொற்களைச் சொல்வதற்கு முன்பு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்தால், அங்குள்ள இந்த நபருக்கு ஒருவழியை கண்டுகொள்ள முடியும். அவர் அதில் அலட்சியமாக இருந்தால், அவரின் அந்த அலட்சியம் காரணமாக சர்வவல்லமையுள்ள அல்லாஹ்வின் முன் அவர் குற்றவாளியாக இருப்பார். அதனால்தான் தீனைப் (மார்க்கத்தைப் பற்றி) பற்றி பேசுவதற்கு முன்பு நீங்கள் நிறைய முன்னெச்சரிக்கை நடடிவக்கைகளை எடுக்க வேண்டும். உங்களுக்கு தெரியாத ஒன்றை நீங்கள் அறிவிக்கக்கூடாது. இந்த வகையான தவறை செய்யும் உலமாக்கள் உட்பட பலர் உள்ளனர். அவர்கள் குர்-ஆனின் வசனங்களையும் ஹதீஸ்களையும் தவறாக விளக்குகிறார்கள். மேலும் அவர்கள் பொதுமக்களை தவறாக வழிநடத்துகிறார்கள்.

எனவே அறிவு இல்லாமல் மார்க்கத்தைப் பேசுவது மிகவும் தீவிரமானது என்று மட்டுமல்ல அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதும் பாவம் செய்வதற்கு ஒத்த ஒரு செயலாகவும் இருக்கும். அங்கு நீங்கள் உண்மையற்ற விஷயங்களைச் சொல்கிறீர்கள். பிறரை ஏமாற்றி ஒருவர் சம்பாதித்து குவித்து கொள்ள விரும்பும் அனைத்தும், நேர்மையான மற்றும் உண்மையுள்ள மக்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் சேமித்து வைத்திருப்பதை ஒப்பிடும் போது ஒன்றுமில்லை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இது ஒன்றுமல்ல, மிக குறைந்த நேரமே நம்முன் உள்ளது. அதனால்தான் நீங்கள் உண்மையைச் சொல்ல வேண்டும், சத்தியத்தை முன் வைக்க வேண்டும். சத்தியத்தில் உறுதியாக இருங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பார்வையில் நீங்கள் உண்மையிலேயே அர்த்தமுள்ளவராக இருக்க விரும்பினால் உண்மையை பரப்புங்கள். அவனது சத்தியத்தின் பண்பை நாம் ஏற்று நடக்க வேண்டும். நீங்கள் சத்தியத்தை முன் எடுத்து செல்லும்போது, சத்தியத்தின் வழியில் வாழ்கையை அமைக்க விரும்பும்போது பெரிய தடைகள் மற்றும் எல்ல வகையான சோதனைகளையும் எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும். அவை உண்மையைச் சொல்ல வேண்டாம் என்று நம்மைத் தூண்டிக்கொண்டிருக்கும். ஆனால் உண்மையைச் சொல்வதிலும் அதில் நிலைத்திருப்பதிலும் உங்களுக்கு உயரிய நற்கூலிகள் உண்டு என்பதை பெறுவீர்கள் என்று நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். அந்நிலையில் நாம் பல இழப்புக்கும் ஆளாகிவிடுவோம். ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பொருட்டு நாம் இழப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இழப்பு எதிர்காலத்தில் நம்மை காத்திருப்பதற்கு முன் ஒன்றுமில்லை. இது வீணான இழப்பு அல்ல, இது உங்களை பெரியவனாக்குகிறது. இதனை ஒரு சிறப்பு இழப்பு எனலாம், ஏனென்றால் இது உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும். இந்த இழப்பானது, பழங்கள் நிறைந்த ஒரு பெரிய மரத்தை பெற்றெடுக்க ஒரு விதை எதிர்கொள்ளும் சிரமங்களை போலாகும்.

எனவே, எல்லா முஸ்லீம்களும் குறிப்பாக ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களும் அல்லாஹ்வின் பண்புக்கூறுகளில் நான் அளித்த அனைத்து விளக்கங்களில் ஆழமாக சிந்திப்பார்கள் என்று நம்புகிறேன். ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் பண்புகளை வாசிப்பது நமது

கடமையாக மாற்றுவோம். இன்ஷா அல்லாஹ்! மேலும் இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ்வின் அருளுக்குரிய ரமளான் மாதம் வருகிறது. பொதுவாக ஒவ்வொரு முஸ்லீம்களும் - நாம் அனைவரும் இந்த அருளுக்குரிய நாட்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லாஹ்வின் அன்பை அறுவடை செய்தவற்காக மேலும் மேலும் நாம் அல்லாஹ்விடம் திரும்புவோம். மேலும் இந்த கடினமான காலங்களில் அல்லாஹ் மனிதகுலத்தின் மீது கருணை காட்டவும், புத்துயிர் பெறவும் நாம் அனைவரும் பிரார்த்திப்போம். தற்போது, அதிகாரப்பூர்வமாக கூறினால் உலகெங்கும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு கோவிட் -19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் 145,000 –க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர். இந்த குர்-ஆன் வசனத்துடன் நான் எனது பேருரையை முடித்துக் கொள்கிறேன்.

**“உலகப் பொருள் மறுமையுடன் ஒப்பிடும் போது அற்பமானதே” (9: 38).**

Translated by:
Naib Amir Azim Ahmad

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**